கல்விப் பொதுத்தராதர பத்திர (உயர்தர) பரீட்சை -2019

General certificate of Education (Adv.Level) Examination

அரசியல் விஞ்ஞானம் - உலக அரச மாதிரிகள் - பயிற்சி வினாக்கள்

23 T -1

ஆக்கம் : ற. அஹமட் அஹ்சன்

B.A (Hons) Special. In. Political Science (Reading)

இரண்டு மனித்தியாலம்

❖ **1 – 40 வரையான வினாக்களில் 04 கூற்றுக்கள் சரியானதாகும். ஒரு கூற்று பிழையானதாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவு செய்க.**

1. அரசு என்பது

A. சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தோற்றம் பெற்ற தாபனமாகும்.
B. நிரந்தரமான தாபனமாகும்
C. புலனீடற்ற தாபனமாகும்
D. அரசாங்கத்தின் கரமாகும்
E. பரிபூரமாணதும் மானசீகமானதுமாகும்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

2. **அரசு என்பது**

A. அரசறிவியலில் ஆராயப்படும் பிரதான எண்ணக்கருவாகும்
B. இறைமையின் உரித்தாளன்
C. வரையறுக்கப்படாத ஆள்புலத்தை கொண்டது
D. வரையறுக்கப்படாத மக்கள் தொகையை கொண்டுள்ளது.
E. காலத்திற்கு ஏற்ப மாறும் தன்மை கொண்டுள்ளது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

3. **அரசு என்பது**

A. சமூகத்தில் உள்ள உயர் தாபனமாகும்
B. ஆள்புலம் , மக்கள் தொகை, இறைமை , அரசாங்கம் ஆகிய கூறுகளை கொண்ட தாபனமாகும்
C. முழுச் சமூகத்தையும் பிரதிநிதித்துவம செய்கின்றது.
D. சமூகத்தில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டுகிறது.
E. சமூகத்திற்கு முந்தியது

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

4. **கோத்திர அரசானது**

A. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த முதல் அரச முறையாகும்.
B. சமூகத்தில் பரந்து காணப்பட்ட அரச முறையாகும்.
C. பலம்மிக்க நபர்களினால் ஆட்சித் தீர்மானங்கள் எடுக்கும் குழு முறையினை கொண்டிருந்தது..
D. தன்னிறைவு பெற்ற சமூகமாக விளங்கியது.
E. ஆண்களின் தலைமைத்துவத்தை கொண்டிருந்தது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

5. **கோத்திர அரசானது**

A. உலகில் தோன்றிய முதலாவது அரச முறையாகும்
B. பெரும்பாலான ஆபிரிக்க நாடுகளில் காணப்பட்ட அரச முறையாகும்.
C. இவ்வரசில் ஆட்சித் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக பலம்மிக்க தலைவர்கள் காணப்பட்டனர்.
D. ஆட்சித் தீர்மானங்களை நிறைவேற்றும் அரசியல் நிறுவனங்களை கொண்டிருந்தது.
E. வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை கொண்ட தலைவரை கொண்டிருந்தது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

6. **கோத்திர அரசானது**

A. ஆரம்பகால அரசியல் நிறுவனமே கோத்திர அரசாகும்.
B. மனிதன், குடும்பம், குலம் என்ற அடிப்படையில் உருவானது.
C. சிரேஷ்டத்தன்மையின் அடிப்படையிலான தலைமைத்துவத்தை பெற்றிருந்தது.
D. வரம்பற்ற அதிகாரத்தை கொண்ட தலைமைத்துவத்தை கொண்டிருந்தது.
E. பலம்மிக்க அதிகார குழு முறையினை கொண்டிருந்தது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

7. **கோத்திர அரசானது**

A. கிரேக்க நகர அரசுக்கு முந்தியதாகும்.
B. இவ்வரசுகளில் பழக்கங்கள், பண்பாடுகள், அனுஸ்டானங்கள் என்பன சம்பிரதாயத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.
C. இவ்வரசுகளில் தலைவரின் குடும்பம் உள்ளிட்ட ஏனையவர்களின் குடும்பங்களும் ஒத்ததன்மை கொண்டதாக இருந்தன.
D. இவ்வரசுகள் ஆண்வழி தலைமைத்துவத்தினை கொண்டிருந்தது
E. மத நம்பிக்கைகள் இவ்வரசு முறையில் மேலோங்கி காணப்பட்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

8. **கிரேக்க நகர அரசானது**

A. கோத்திர அரசு முறையின் பின்னர் அபிவிருத்தியடைந்த அரச முறையாகும்.
B. அரசறிவியலுக்கு அரசு எனும் எண்ணக்கருவினை உத்தியோகபூர்மாக அறிமுகப்படுத்திய அரச முறையாகும்.
C. கி.மு. 04 ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
D. வரையறுக்கப்பட்ட ஆள்புலத்தை கொண்டிருந்தது
E. வரையறுக்கப்பட்ட மக்கள் தொகையினை கொண்டிருந்தது

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

9. **கிரேக்க நகர அரசானது**

A. ஓர சுயாதீனமற்ற அரசியல் அலகாக காணப்பட்டது.
B. பிரபுக்கள், சுதந்திர வாசிகள், அடிமைகள் என 03 பிரதான சமூக வகுப்புக்களை கொண்டிருந்தது.
C. நகர ஆட்சி முறையில் அதிகாரம் பிரபுக்களிடமே இருந்தது.
D. நேரடி ஜனநாயகத்தை கொண்டிருந்தது.
E. வரையறுக்கப்பட்ட குடியுரிமையினை கொண்டிருந்தது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

10. **கிரேக்க நகர அரசானது**

A. நிச்சயிக்கப்பட்ட சிறிய நிலப் பிரதேசத்தில் ஒழுங்கமைந்த மக்களுடன் கூடிய ஆட்சிமுறையாகும்.
B. மக்கள் தொகை, ஆள்புல ரீதியாக சிறிய அரசியல் அலகுகளாக காணப்பட்டது.
C. ஒரே வகையான அரச மாதிரிகளை ஏற்றுக் கொண்டுள்ளது.
D. பொறுப்புடைய பிரஜைகள் மன்றத்தை கொண்டிருந்தது.
E. நேரடி ஜனநாயகத்தை கொண்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

11. **கிரேக்க நகர அரசானது**

A. அரசியல் ரீதியான ஒழுங்கமைப்பாகும்.
B. இவ்வரசின் ஆட்சி நகராட்சி எனப்பட்டது.
C. சமத்துவமான அரசியல் சமூகத்தை கொண்டிருந்தது.
D. நகரத்தின் மதமே பிரஜைகளின் மதமாக காணப்பட்டது.
E. அரசியலில் பிரஜைகள் நேரடியாகப் பங்குபற்றினர்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

12. **கிரேக்க நகர அரசானது**

A. அரசியல் ரீதியாக ஒழுங்கமைந்த முதலாவது அரசமுறையாகும்.
B. தன்னிறைவுப் பொருளாதாரத்தை கொண்டிருந்தமை
C. பணிச்சார்புடைய அரசியல் செயற்பாடுகளைக் கொண்டது.
D. ஒழுக்க விழுமிய வாழ்க்கை முறைகளை கொண்டதாகும்.
E. பிரஜைகளின் அரசாங்கத்தை கொண்டது

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

13. **கிரேக்க நகர அரசானது**

A. கி.மு. 07ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.
B. குடியுரிமை கிரேக்க ஆண்களுக்கே வழங்கப்பட்டிருந்தது
C. கோத்திர ஆட்சி முறை நிர்வாகத்தை புறந்தள்ளிவைத்தது.
D. நகர அரசுக்கு அதிபதியாக ஆண் அல்லது பெண் தெய்வம் காணப்பட்டது.
E. கிரேக்க நகர மக்களிடையே அரசு தொடர்பான் மிக உயர்வான உணர்வு காண்ப்பட்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

14. **முடியாட்சி முறையானது**

A. உலகில் ஆரம்பகாலத்தில் பரவலாக காணப்பட்ட ஆட்சி முறையாகும்.
B. பரம்பரை பரம்பரையாக அரசாட்சிக்கு உரிமை கோரும் ஆண்களின் தலைமைத்துவத்தை மட்டும் ஏற்றுள்ளது.
C. அரசியல் நிறுவனங்கள் குறைந்த மட்ட அபிவிருத்தியில் காணப்படும். ஆட்சி முறையாகும்.
D. ஆட்சியாளரிடம் அரச அதிகாரம் குவிந்து காணப்பட்டது.
E. ஆட்சியாளர்கள் தெய்வீக வழியுரிமையைப் பின்பற்றி இருந்தனர்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

15. **முடியாட்சி முறையானது**

A. அரசாட்சி, மன்னராட்சி எனவும் அழைக்கப்படுகிறது.
B. எல்லையற்ற அதிகாத்தை பெற்றிருந்த ஆட்சியாளரை கொண்டிருந்தது.
C. பரம்பரை வழியாக வரும் ஆண் அல்லது பெண் தலைமைத்துவத்தை கொண்டுள்ளது.
D. இவ்வாட்சி முறையில் பிரஜைகள் என்ற எண்ணக்கரு காணப்படவில்லை. மாறாக கீழ்ப்பட்டவர்கள் என்றே காணப்பட்டது.
E. கீழ்ப்பட்டவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

16. **முடியாட்சி முறையானது**

A. ஆரம்பகால உலகில் பரவலாக காணப்பட்ட ஆட்சி முறையாகும்.
B. தற்கால உலகில் காணமுடியாத ஆட்சி முறையாகும்.
C. இங்கு ஆட்சியாளனே சட்டத்தை உருவாக்குபவனாகவும், அதனை நிர்வகிப்பவனாகவும், நீதி வழங்குபவனாகவும் காணப்படுவான்
D. பிரஜைகள் என்ற எண்ணக்கருவினை கொண்டிருக்கவில்லை.
E. மாறாக கீழ்ப்பட்டவர்கள் அல்லது அடிமைப்பட்டவர்கள் என்றே காணப்பட்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

17. **தாராள ஜனநாயக அரசின் பண்பாவது**

A. தனிமனித சுதந்திரமாகும்.
B. அடிப்படை உரிமைகளாகும்.
C. சட்டத்தின் ஆட்சியாகும்.
D. எதிர்மறை சுதந்திரமாகும்.
E. தனியார் சொத்துடைமையாகும்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

18. **தாராள ஜனநாயக அரசானது**

A. வர்க்க நலன் பேணக்கூடியது
B. நிரந்தரமானது
C. பொதுநலன் பேணும் தாபனமாகும்.
D. இயற்கையின் விளைவினதாகும்
E. இலாப நோக்குடையதாகும்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

19. **தாரளா ஜனநாயக அரசின் பண்பாவது**

A. சமத்துவமாகும்.
B. எதிர்மறை சுதந்திரமாகும்.
C. பொருளாதாரத்தில் அரச ஆதிக்கமாகும்.
D. அடிப்படை உரிமைகளாகும்
E. சுதந்திரமான ஊடகத்துறையாகும்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

20. **தாராள ஜனநாயக அரசானது**

A. நவீன ஜனநாயகவாதத்திற்கு ஆதரவானது
B. சமஉடமை அரசிற்கு எதிரானது
C. பாசிஸ அரசிற்கு எதிரானது
D. முதலாளத்துவத்துடன் நேரடி தொடர்பற்றது.
E. தனியார் உடமையினை ஆதரிக்கின்றது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

21. **தாராளா ஜனநாயகத்தின் படி அரசானது**

A. ஒரு தனித்துவமான சங்கமாகும்.
B. மனித நல்வாழ்வுக்காக தோற்றுவிக்கப்பட்டதாகும்.
C. சமூக நலன் பேணும் தாபனமாகும்.
D. முழுச்சமூகத்தையும் பிரதிநிதித்தவம் செய்கின்றது
E. முதலாளிமார்களின் நலன் பேணக்கூடியதாகும்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

22. **தாராள ஜனநாயக அரசானது**

A. ஜனநாயக ஆட்சியினை வலியுறுத்துகின்றது.
B. பல கட்சி முறையினை ஆதரிக்கின்றது.
C. அரசுடமையினை வலியுறுத்துகின்றது.
D. தனியார் உடமையினை வலியுறுத்துகின்றது.
E. சட்டத்தின் ஆட்சியினை வலியுறுத்துகின்றது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

23. **சோசலிச அரசினது பண்புகளாவன**

A. தனிக்கட்சி முறையினை கொண்டிருத்தலாகும்
B. பலகட்சி முறையினை கொண்டிருத்தலாகும்.
C. வர்க்க சமத்துவம் ஒழிக்கப்பட்டிருப்பதாகும்.
D. நடைமுறைசார் சமத்துவம் அமுலிலிருத்தலாகும்
E. பிரஜைகளின் பௌதிக வாழ்க்கை தரம் உயர்வாக இருத்தலாகும்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

24. சோசலிச அரசினது பண்புகளாவன

A. தனிநபர் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கும்
B. வர்க்க சமத்துவம் ஒழிக்கப்பட்டிருத்தல்
C. நடைமுறைசார் சமத்துவம் அழுலிலிருத்தல்
D. இலாப நோக்குடைய தனியார் பொருளாதாரம் நடைமுறையிலிருத்தல்
E. ஒரு கட்சி மட்டும் நடைமுறையிலிருத்தல்.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

25. சோசலிச அரசின் பண்புகளாவன

A. தாரண்மைவாதத்திற்கு எதிரானதான ஒரு கருத்தியாலக இருத்தல்
B. முதலாளித்துவத்திற்கு ஆதரவான ஒரு கருத்தியலாக இருத்தல்
C. உற்பத்தி கருவிகளை பொதுஉடமையாக வைத்திருத்தல்
D. பிரஜைகளின் வாழ்க்கை தரம் உயர்வாக இருத்தல்
E. தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட்டிருத்தல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

26. சமஉடமைவாத அரசின் பண்புகளாவன

A. உற்பத்தி வழிமுறைகளை தனிநபர் அன்றி அரசு கட்டுப்படுத்தல்
B. சமூக தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி இடம்பெறுதல்
C. தனிப்பட்டவர்களின் இலாப நோக்கங்கள் சமூக சேவைகளால் மாற்றப்படுதல்
D. தனிநபர் மற்றும் குழுக்களின் சர்வதிகாரம் நிலவும்
E. தனநபரை விட சமூகம் முக்கியம் பெறும்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

27. சோசலிச அரசின் பண்புகளாவன

A. தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட்டிருப்பத்தல்
B. சமூக சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்
C. கடுமையான வர்க்க உணர்வு காணப்படுதல்
D. கூட்டுறவு அடிப்படையில் உற்பத்தி இடம்பெறுதல்
E. அரசுக்காக மக்கள் என்ற கோட்பாடு நிலவுதல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

28. பாசிஸவாத அரசானது

A. ஒரு வலிமையான அரசு முறையாக பார்க்கப்படுகிறது.
B. 1920, 1930 களில் இத்தாலி மற்றும் ஜேர்மனியில் முறையே முசோலினி மற்றும் ஹிட்லர் போன்றோரினால் உருவாக்கப்பட்டது.
C. சமூகத்திற்கு மேலான தாபனமாக அரசினை அடையாளப்படுத்துகிறது.
D. ஒரு தனிக்கட்சி முறையினை வலியுறுத்துகிறது
E. நிலையற்ற தாபனமாக அரசினை அடையாளப்படுத்துகின்றது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

29. பாசிஸவாத அரசானது

A. அனைத்திற்கும் மேலானது
B. சர்வ வல்லமை பொருந்தியது
C. இனவாதத்தை கொண்டது
D. ஆரம்பமோ முடிவோ அற்றது.
E. சமூகத்திற்கு கீழ்ப்பட்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

30. பாசிஸவாத அரசினது பண்புகளாவன

A. தாராள ஜனநாயகத்திற்கு ஆதரவானதன்று
B. சோசலிசத்திற்கு ஆதாரவனதன்று
C. இனவாதத்தை எதிர்க்கிறது
D. பொதுமக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்டதன்று
E. யுத்தத்தில் நர்ட்டம் கொண்டது

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

31. பாசிஸவாத அரசினது பண்புகளாவான

A. மனித தாபனங்களுக்கு மேம்பட்டது
B. போட்டி கட்சி முறையை வலியுறுத்துகின்றது
C. தனி முதன்மையான அதிகாரம் கொண்டது
D. யுத்தத்தில் நாட்டம் கொண்டது.
E. ஆக்கிரமிப்பு நாட்டம் கொண்டது

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

32. பாசிஸவாத அரசினது பண்புகளாவன

A. இனவாதத்தை ஆதரிக்கின்றது
B. சமூகத்தன்மையை ஆதரிக்கின்றது
C. அதனது அதிகாரம் தனிமுதன்மையானது
D. சர்வதேச சட்டங்கள், உடன்படிக்கைகளை புறக்கணிக்கின்றது
E. அரசு மக்களுக்கு அல்ல : மக்கள் அரசுக்கு என்ற நிலைப்பாட்டை கொண்டது.

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

33. காலனித்துவ அரசானது

A. உலகில் காணப்பட்ட பரந்துபட்ட அரச முறைமைகளுள் ஒன்றாகும்
B. காலனித்துவம் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் உருவானது
C. ஓர் அரசு தனது நோக்கங்களிற்காக பிற எல்லை பரப்புக்களை ஆக்கிரமித்து அவ் எல்லைகளை தன்னுடன் இணைத்துக் கொள்கின்ற முறை காலனித்துவமாகும்.
D. 16ம் நூற்றாண்டின் பின் வீழ்ச்சி கண்ட அரச மாதிரியாகும்
E. போர்த்துக்கல், ஒல்லாந்து, பிரித்தானியா, பிரான்ஸ் என்பன ஆரம்பகால காலனித்துவ நாடுகளாகும்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

34. காலனித்துவ அரசின் பண்புகளாவன

A. குறித்த அரசானது பிற அரசுகளின் அரசியல் எல்லை மீது ஆக்கிரமிப்பு செய்தல்
B. இராணுவ அரசு நிலவுதல்
C. முழுச் சமூகத்தையும் அடக்கி ஆட்சி புரிதல்
D. குறித்த தேசிய அரசின் வர்க்கங்களோடு இணைந்து செயற்படுதல்
E. ஒடுக்கு முறை அல்லது அடக்கு முறை இயக்கங்களை பயன்படுத்தல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

35. காலனித்துவ அரசின் பண்புகளாவன

A. மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாக, இராணுவ கட்டமைப்பை கொண்டிருத்தல்
B. குடியேற்றவாத கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தல்
C. உள்ளூர் வர்க்கங்களுக்கிடையே ஒற்றுமை, இணக்கப்பாட்டை ஏற்படுத்தல்
D. பிரித்தாளும் தந்திரங்களை கையாளுதல்
E. குடியேற்றவாத நாட்டின் பொருளாதார செல்வங்களை சுரண்டுவதில் ஈடுபடல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

36. காலனித்துவ அரசின் பண்புகளான

A. ஓர் இராணுவ ஆட்சியாக இருத்தல்
B. முழுச்சமூகத்தையும் அடக்கி ஆட்சி புரிதல்
C. அரசாங்கம் ஓர் யாப்பின் அடிப்படையில் செயற்படுதல்
D. உள்ளூர்வர்க்கங்களை அரசின் பங்காளராக கருதாமை
E. உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

37. பின் காலனித்துவ அரசின் பண்புகள்

A. வலுவான இராணுவக் கட்டமைப்பு
B. வலுவான சிவில் நிர்வாகக் கட்டமைப்பு
C. காலனித்துவ கட்டமைப்பின் விரிவாக்கம்
D. அரசியல் கட்சிகளின் மேலாதிக்கம்
E. சிவில் நிறுவனங்களின் தொழிற்பாடு

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

38. நவ தாராண்மைவாத அரசின் தோற்றத்திற்கு வித்திட்ட காரணி

A. நலன்புரி அரசின் வீழ்ச்சி
B. பொதுநல அரசின் பின்னடைவு
C. முதலாளித்துவத்தின் எழுச்சி
D. உலகமயமாக்கலின் எழுச்சி
E. சந்தை பொருளாதாரத்தின் பிரவேசம்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

39. நவ தாராண்மைவாத அரிசின் பண்புகள்

A. குறைந்த பட்ச அரசின் வகிபாகம்
B. மட்டுப்படுத்தப்பட்ட அரசின் தலையீடு
C. திறந்த சந்தை பொருளாதாரம்
D. பொலிஸ் அதிகாரத்திற்கு மேற்பட்ட அரச அதிகாரம்
E. நலன்புரி விடயங்களை புறக்கணித்தல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

40. நவ தாராண்மைவாத அரசின் பண்புகள்

A. அரசு பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் அதிகூடிய தலையீட்டை செலுத்துதல்
B. அரசு பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீட்டை செலுத்துதல்
C. அரசு தலையிடாவதம் மற்றும் நலன்புரிவாதம் ஆகிய இரண்டுக்கு இடைப்பட்ட நிலையாக இருத்தல்
D. நலன்புரி திட்டங்களை முற்றாக உதிர்தல்
E. அமுக்கத்திற்குட்பட்டவர்களின் வாழ்வுரிமைகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊடாக பாதுகாத்தல்

1.ABCD 2.BCDE 3.ABDE 4.ACDE 5.ABCE

THE STAI